மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) & (ஆ) விழுப்புரம் நகராட்சியின் ஆய்விலுள்ளது.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைப் போட்டது போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு, ஆனால் உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு அது வந்திருக்கிறது, என்று கருதுகிறேன். விழுப்புரம் பேருந்து நிலையத்திலே பஞ்சாயத்து போர்டின் பார்வையிலே இருக்கின்ற பேருந்துகளும் துரித வண்டிகளும் இருக்கின்றன. இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒட்டி இருக்கிற காரணத்தாலும், அங்கே அன்றாடம் ஆயிரக்கணக்கான பயணிகள் கூடுகிறார்கள் என்ற காரணத்தாலும் வண்டிகள் அங்கே நிற்பதற்குப் போதுமான வசதிகள் இல்லாத காரணத்தாலும் கழிவு அறைகள் போதுமானதாக இல்லாத காரணத்தாலும், அங்கே பக்கத்திலே ஒரு பெரிய குளம் ஆக்கிரமிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லபடுகிறது, அங்கே ஒரு பேருந்து நிலையத்தைத் துரிதமாகக் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அந்த வேலை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வசதிக் குறைவை மனதிலே கொண்டு அங்கே புதிதாக பேருந்து நிலையம் அமைக்கும் முயற்சியை நகர வளர்ச்சி இயக்குநர் எடுத்து ஆணையருக்கு அறிக்கை அனுப்பிய பிறகு அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஊராட்சிகளில் வரி வசூல்.

* வினா எண். 286—திரு. கே. உச்சி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட நிர்வாக சீர்திருத்தக் குழு பரிந்துரைகளின்படி ஊராட்சிகளின் வரி வசூலை கிராம சேவக்குகளின் பொறுப்பில் ஒப்படைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

1979 மார்ச் 8]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை. (நிர்வாக சீர்திருத்தக் குழு அப்படி பரிந்துரைக்கவில்லை.)

(ஆ) கேள்வி எழவில்லை.

ஊராட்சி சாலைகள்.

* வினா எண். 287—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்றங்களின் பொறுப்பில் உள்ள சாலைகளை ஊராட்சிகளின் நிதி வசதி சீராக இல்லாததால் ஒன்றியங்களின் பராமரிப்பில் கொண்டு வருவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து இல்லை.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களின் பொறுப்பிலே உள்ள சாலைகள் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பொது நிதியிலே பணம் ஒதுக்கப்படவில்லையென்றால் உள்ளாட்சிச் சாலைகள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. இதுபற்றிய பல பிரச்சினைகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதுபற்றிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பெற்று அரசுக்கு அனுப்பப்பட்டிருகின்றன. உள்ளாட்சி சாலைகளைப் பராமரிக்கவேண்டுமென்றால் அதற்குப் பண வசதியில்லை. ஆகவே, லோக்கல் ரோட்ஸ் கிராண்ட்ஸை அதிகப்படுத்துவதற்கும், உள்ளாட்சிச் சாலைகளை ஒன்றியங்களே பராமரிக்கின்ற ஏற்பாட்டைச் செய்வதற்கும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஒன்றியங்களுக்கு உள்ளாட்சிச் சாலைகளை மாற்றுவது என்றால் மொத்தம் உள்ளாட்சிச் சாலைகள் 36,782 கிலோ மீட்டர் என்ற அளவிற்கு இருக்கின்றன. ஒரு கிலோ மீட்டருக்கு 60 ஆயிரம் ரூபாய் ஆகும் என்று தெரிவிக்கப்படுகிறது, இந்த நிலையில் மொத்தம் 221 கோடி அதற்கு மட்டும் தேவைப்படும். ஆகவே அவைகளை ஒன்றியங்கள் ஏற்பதற்கு வழியில்லை. ஓரளவிற்கு அவைகளைச் செப்பனிட்டு ஒன்றியத்திற்குப் பிறகு ஒப்படைப்பது தான் இயலும்.